AIDS InfoNet www.aidsinfonet.org

# எச்ஐவியும் வயதானவர்களும்
# (OLDER PEOPLE AND HIV)

Fact Sheet Number 616
அத்தியாயம்

**வயதானவர்கள் எத்தனை பேர் எச்ஐவியுடன் இருக்கிறார்கள்?**
இந்தியாவில் 50 வயது மற்றும் அதற்கு மேலும் 8713 பேர் இருந்ததாக ஆகஸ்ட் 2006 அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எப்படி இருந்தாரும் பலபேர் பல சந்தர்ப்பங்களில் எச்ஜவி பரிசோதனை செய்து கொள்ளாமலே இறந்து விடுகின்ற நிலைகள் மற்றும் காசநோய் போன்ற பல சந்தர்ப்பவாத நோய்களினால் இறந்து விடுகின்ற நிலைகளுக்கும் இது நல்ல வழிகாட்டியாக இல்லை.

பலபேர் 50 வயதை வயதானதாக கருதுவதில்லை எச்ஜவி மற்றம் எய்ட்ஸ் உடன் இருக்கும் போது புள்ளிவிபரங்கள் 50 வயதை வயதானதாகவே சொல்லுகின்றன.

**வயதானவர்கள் ஏன் எச்ஜவி தொற்றுக்கு ஆளாகிறார்கள்?**
அதற்கு பல காரணங்கள் உள்ளன:

- சுகாதாரப் பணியாளர்கள் வயதானவர்களுக்கு எச்ஜவி பரிசோதனை செய்யாமலிருக்கலாம்.
- எச்ஜவி பரவும் ஆபத்துகள் பற்றி வயதானவர்களுக்கு போதிய தெளிவு மற்றும் விபரங்கள் தெரியாமல் இருக்கலாம். (Fact Sheet 150 மற்றும் 152 ஐ பார்க்கவும்)
- வயதானவர்களில் பலபேர் தனியாக வாழலாம்.. அவர்கள் விவாகரத்து பெற்று அல்லது துணை இறந்து விட்ட நிலையில் இருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் துணையோடு இருக்கும் போது எச்ஜவி தடுப்பு முறைகளை கண்டு கொள்வதில்லை.
- வயதானவர்களுக்கான எச்ஜவி தடுப்பு பற்றிய கல்வி இல்லாததனால்.
- எச்ஜவி இளைஞர்களை மட்டுமே தாக்கும் என்ற நம்பிக்கையினால்.
- பாதுகாப்பான உடலுறவு பற்றி பயிற்சி இல்லாததனால் (Fact Sheet 150 ஐ பார்க்கவும்)
- பாதிக்கப்பட்டவருடன் ஊசிகளை பகிர்ந்து கொள்வதனால்
- பாதுக்காப்பற்ற பாலியல் செயல்பாடுகள், இது ஆண் பெண் உடலுறவு அல்லது ஒரே பாலினத்தோடு உறவாகக்கூட இருக்கலாம். வயகரா மற்றும் பிற மருந்துகள் நீண்ட நேரம் விறைப்படைந்த நிலையில் மற்றும் பாலியல் இன்பத்தை தொடர்ந்து வைத்திருக்க உதவுவது, வயதானவர்கள் மத்தியில் பாலியல் இன்பம் மற்றும் பால்வினை நோய்கள் இளைஞர்களுக்கு ஏற்படுத்துவதை போன்றே ஏற்படுத்துகிறது.

**வயதானவர்களிடம் எச்ஜவி நோயானது மாறுபட்டு இருக்கிறதா?**
முதல் ஆய்வானது வயதானவர்களுக்காக வலுவான எச்ஜவிக்கு எதிரான மருந்துகள் வருவதற்கு முன்பாக நடத்தப்பட்டது. இளம் வயதினரை விட வயதானவர்கள் நோய்வாய்ப்பட்டு விரைவிலேயே இறந்து விடுகிறார்கள். இது வயதானவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியின் குறைவை காட்டுகிறது. பொதுவாகவே எச்ஜவி தவிர பல உடல் நல பிரச்சினைகள் அவர்களுக்கு ஏற்படுகிறது. பொதுவாக வயதாகும் போது நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது. வுயதானவர்கள் நாட்பட்ட வியாதிகளை காக்கும் பொறுப்புக்கு ஆளாகிறார்கள். எச்ஜவி உள்ள இளைஞர்கள் போல எச்ஜவி உள்ள வயதானவர்கள் செயல்பட முடியாது எப்படி இருந்தாலும் எச்ஜவிக்கு எதிரான மருந்துகள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றன. வயதானவர்கள் போதைப் பொருள் பயன்படுத்துபவராகவும் அல்லது பைத்தியக்காரராகவும் இல்லையெனில் அவர்கள் தவறாமல் (தவறாமல் மாத்திரை எடுப்பதற்கான தகவலை குயஉவ ளூநநவ் 405ல் பார்க்கவும்) மருத்துவ சிகிச்சை இளைஞர்களைக் காட்டிலும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**எச்ஜவிக்கான மருத்துவ சிகிச்சை வயதானவர்களுக்கும் ஒரே மாதிரித்தான் இருக்கிறதா?**
வைரஸ் கிருமியை கட்டுப்படுத்துவதில் வயதானவர்களுக்கும், இளைஞர்களுக்கும் ஒரே மருத்துவம் தான், 50 வயதுற்கு மேல் எச்ஜவித் தொற்று ஏற்படுபவர்கள், 50 வயதில் அல்லது அதற்கு மேல் எச்ஜவி தொற்றுக்கான மருந்து எடுத்துக்கொள்பவர்களைப் போலதான் இருக்கிறார்கள்.

எப்படி இருந்தாலும் T – செல்கள் இளைஞர்களுக்கு திரும்பவும் பலம் சேர்ப்பது போல் வயதானவர்களுக்கு ஆவதில்லை. வுயதானவர்களுக்கு எந்த விதமான மருத்துவ சிகிச்சை ஆய்வுக்கும் உட்படுத்த வில்லை ஆதனால் துரதிஷ்டவசமாக எந்த ஒரு நல்ல தகவலும் அதைப்பற்றி இல்லை.

வுயதானவர்களுக்கு சிகிச்சையினால் ஏற்படும் பக்கவிளைவுகள் அடிக்கடி தோன்றாமல் இருக்கலாம். எப்படியிருந்தாலும் வயதாகும் போது பல விளைவுகளுக்கும் சிகிச்சையினால் ஏற்படும் பக்கவிளைவுகளைப் போன்று ஒத்து இருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக அதிகமாக இதய நோய் ஆபத்து ஏற்படும் மேலும் அடிவயிற்றுப் பகுதியில் கொழுப்பும் சேர்ந்துவிடும், எச்ஜவி இல்லாமல் இருந்தாலும் கொழுப்புகளின் பரிமாற்றம் (இழுப்பு) லிப்போடிஸ்டிரோப்பியின் மூலம் ஏற்படும் மாற்றங்கள் போல் காணப்படும்.

**பொதுவாக ஏற்படும் பிற உடல் (ஆரோக்கியத்தில்) பிரச்சினைகள் என்னென்ன?**
வயதான பிறகு அவர்கள் வாழும் வாழ்க்கையில் தொடர்ந்து பல உடல் (ஆரோக்கிய) பிரச்சினைகளை சந்திக்கிறார்கள். இதில் இதய நோய்கள், மன அழுத்தம் ஆஸ்ட்ரோபோரிஸிஸ் (Fact Sheet 557ல் பார்), உயர் இரத்த அழுத்தம் ஆர்த்திரிட்டிஸ், நீரிழவு, அலிமீர் நோய்கள் மற்றும் பல்வேறு வகையில் ஏற்படும் புற்று நோய்கள் அடங்கும்.

வயதானவர்கள் தங்களுக்கு ஏற்படும் ஆரோக்கிய பிரச்சினைகளுக்காக பல்வேறு மருத்துவ முறைகளை மேற்கொள்கிறார்கள் இதனால் அவர்களுக்கு பரிந்துரைக்கப்படும் எச்ஜவி எதிர் மருந்துகளை தேர்ந்தெடுப்பது மருத்துவர்களுக்கு சிரமமாகிறது ஏனெனில் மேற்கண்ட பல மருத்துவ சிகிச்சைகள் மூலம் இதற்கு பல எதிர்விளைவுகள் ஏற்படும்.

சில எச்ஜவி மருத்துவங்கள் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம அல்லது ஆஸ்ட்ரோபோரிஸிஸ் ஆபத்தை அதிகரிக்கலாம். இது சரியான எச்ஜவி மருந்தை தேர்ந்தெடுப்பதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

**மனப்பிரச்சினைகள்:**
வயதானவர்கள் இளைஞர்களைவிட அதிகமாக சிந்தித்தல் மற்றும் நினைவுக்கொள்ளும் பிரச்சினைகளை சந்திக்கிறார்கள். இவை எச்ஜவி தொற்றினால் ஏற்படும் மனப்பிரச்சினையை ஒத்ததாகும். மேலும் Fact Sheet 505ல் எச்ஜவி மற்றும் நரம்பு சம்மந்தமான பிரச்சினைகள் பற்றி அறியலாம்.

இந்தப் பிரச்சினை சிலநேரங்களில் டிமென்ஸியா (Dementia) என்று அழைக்கப்படும். உயர் எச்ஜவி எதிர் மருந்துகளை பயன்படுத்துவதற்கு முன் குறைவான தாக்கத்தை இவை ஏற்படுத்தலாம், இதன் மூலம் எச்ஜவியுடன் வாழும் வயதானவர்களுக்கு எதனால் மனப்பிரச்சனை வருகிறது என்பது அறிவது கடினம். இது சாதாரணமாக வயதானவர்களுக்கு வருமா? அல்லது எச்ஜவி பாதிப்புகளினால் வந்ததா? என்று அறிவது மிகவும் கடினமான காரியம் ஆகும். ஆராய்ச்சிகள் அதிக வயதினருடனும் மற்றும் அதிக வைரஸ் கிருமிகளும் மனப்பிரச்சினையை ஏற்படுத்துகிறது என்று தொடர்பு படுத்துகிறது. (மேலும் தகவல்களுக்கு Fact Sheet 125ல் பார்க்கவும்).

வயதானவர்களுக்கு மன அழுத்தத்தின் அளவு மற்றும் போதை மருந்து எடுப்பது பற்றி ஆராய்ச்சிகள் அந்தளவுக்கு இல்லை. எப்படி இருந்தாலும் இந்த பிரச்சினைகள் எச்ஜவி அல்லது வயதாவதால் அல்லது இரு காரணங்களாலும் ஏற்படுகிறது. அவர்கள் அதற்கான காரணங்களை கண்டறிவது மற்றும் சரியான சிகிச்சை எடுப்பது அவசியம் ஆகும்.

**அடிப்படை வரையறைகள்:**
இளைஞர்கள் எச்ஜவியினால் பாதிக்கப்படுவது போலவே வயதானவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். இருந்தாலும் எச்ஜவி தொற்று ஏற்படுத்தும் ஆபத்தைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. எச்ஜவி பரவும் முறைகளில் இருந்து தங்களை எப்படி பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு தெரியாமலிருக்கலாம்.

வயதானவர்கள் பல்வேறு மற்ற உடல் பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள். இது எச்ஜவிக்கான எதிர் மருந்தை தேர்ந்தெடுப்பதில் சிரமமாக்குகிறது, மேலும் எச்ஜவி மருந்துகள் மூலம் ஏற்படும் பக்க விளைவுகளால் குழப்பமடைகிறார்கள்.

T-செல்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் எச்ஜவி மருந்துகள் வயதானவர்களுக்கு நல்ல முறையில் வேலை செய்கின்றது. இளைஞர்களைவிட வயதானவர்கள் மருந்து சிகிச்சை எடுத்துக்கொள்வது நன்றாக இருக்கலாம்.

**மேலும் தகவல்கள்:**
எச்ஜவி மற்றும் வயதானவர்கள் பற்றி மேலும் தகவல்கள் பெற பின்வரும் இணைய தளத்தில் தெரிந்துக் கொள்ளலாம். www.avert.org/older_people.htm